# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 35 | வ.ஆ. 2007 ஆனி 24 | றஜபு 8 | (7-7-76) புதன் புத்தகம் 30 | இதழ் 22


## கண்ணதாசன் பாடல்களுக்கு தடை?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் ஒலிபரப்புக்களில் கவிஞர் கண்ணதாசன், கவிஞர் வாலி ஆகியோர் எழுதிய பாடல்களை இனிமேல் நீங்கள் கேட்க முடியாமற் போகலாம். ஏனென்றால் இப்பாடல்களை வானொலியில் ஒலிபரப்புவதிலிருந்து முற்றாக தடைசெய்ய வேண்டுமென்று "அறிஞர் கோன்" என்று தங்களைத்தாங்களே பீற்றித்திரியும் வால்பிடிவால் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாம். கண்ணதாசன், வாலி ஆகியோரது பாடல்கள் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு வேகம் சேர்ப்பதாக அமைந்திருக்கின்றன என்று கூறியே அவற்றை தடைசெய்ய ஆலோசனை கூறப்பட்டுள்ளதாம்.

# திருகோணமலையில் போராட்டப் பிரகடனம்!

## மாநாடு பற்றியே எங்கும் பேச்சு! விடுதலை உணர்வே தமிழனின் மூச்சு!

எதிர்வரும் வெள்ளி, சனி ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாநாட்டு ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. இம்மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் போராட்டப்பிரகடனம் அறிவிக்கப்படவிருக்கிறது. தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு முக்கிய கட்டத்தில் நடைபெறும் இந்த மாநாடு தமிழ் தேசிய இனத்தின் எழுச்சியின் பிரதிபலிப்பாக அமையவிருக்கிறது. இம்மாநாட்டில் நாடெங்கிலுமிருந்து இலட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் பங்குபற்றவிருக்கின்றனர்.

தமிழ் தேசிய இனத்தின் இறைமையையும் விடுதலையையும் வென்றெடுப்பதற்கான ஓர் செயல்திட்டத்தை தயாரித்து திருகோணமலையில் யூலை மாதத்தில் நடைபெறும் விடுதலைக்கூட்டணியின் மாநாட்டில் சமர்ப்பிக்குமாறு கூட்டணியின் நடவடிக்கைக்குழுவுக்கு சென்ற மே திங்களில் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற கூட்டணியின் தேசிய மாநாடு கட்டளையிட்டிருந்தது தெரிந்ததே.

தேசிய மாநாடு இட்ட மேற்படி கட்டளையின் அடிப்படையில்தான் யூலை 9, 10ம் திகதிகளில் கூட்டணியின் சிறப்பு மாநாடு கூட்டப்படுகிறது. இம்மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கான செயல் திட்டங்களையும் போராட்டத்திட்டங்களையும் கூட்டணியின் நடவடிக்கைக்குழு ஏற்கனவே தயாரித்துவிட்டது.

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் அதிமுக்கியமான நேரத்தில் நடைபெறும் இச்சிறப்பு மாநாடு தமிழ் சமுதாயத்துக்கு மாபெரும்

—3-ம் பக்கம் பார்க்க



## இன்று நவரத்தினம் பேசுகிறார்!

'திருமலை காணவாரீர் — தீட்டிய திட்டங்கள் கேண்மின்'' என்ற தலைப்பில் இன்று (7-7-76) மாலை 6 மணிக்கு கொழும்பில் தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கில் சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் பேசுறார்.

## சிறுபான்மைத் தமிழருக்கு பிரதிநிதித்துவம் கிடைக்க கூட்டணி வழிவகுக்கும்!

அடுத்தபொதுத்தேர் தலில் சிறுபான்மைத்தமிழ் சமூகத்திலிருந்து குறைந்த பட்சம் ஒருவரையோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களையோ தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வேட்பாளராக நியமிக்கவிருக்கிறது. இதுசம்பந்தமான தீர்மானம் திருகோணமலையில் சென்ற சனிக்கிழமை (3-7-76) பிற்பகல் நடைபெற்ற கூட்டணியின் நடவடிக்கைக் குழுவில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டணியின் துணைத்தலைவர்களில் ஒருவரான மூதூர் ஜேச். டீ. வாஸ் தலைமையில் நடைபெற்ற நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானம் வருமாறு:-

"தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையைப் பரிசீலனை செய்து, அதில் யாழ்ப்பாண டாக்குநாட்டில் 3 சிறுபான்மைத் தமிழர்களின் பிரதிநிதித்துவம் பற்றிச்சொல்லப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து, சிறுபான்மைத் தமிழர்க்கு தேசிய அரசுப் பேரவையில் பிரதிநிதித்துவம்பெறச் செய்வது, தமிழ் மக்களின் ஒரே அமைப்பான தமிழர் விடுதலைக்கூட்டணியின் கட

—4-ம் பக்கம் பார்க்க

## தமிழர் கூட்டணி சட்டத்தரணிகள் ஆஜராகினர்!

புலோலி வங்கிக்கொள்ளை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மீதான அடையாள அணிவகுப்பு அண்மையில் யாழ். பதில் மாவட்ட நீதவான் முன்னிலையில் நடைபெற்றபோது, சந்தேக நபர்கள் சார்பில் தமிழர் கூட்டணி சட்டத்தரணிகளான திருவாளர்கள் ஆர். விசுவநாதன், எம். ஆலாலசுந்தரம், வி. யோகேஸ்வரன் ஆகியோர் ஆஜராகினர்.

## சங்கரி தலைமையில் சமபந்தி போசனம்!

தமிழ் மக்கள் மத்தியிலிருக்கும் தீண்டாமையையும், சாதிவேறுபாடுகளையும் ஒழித்துக் கட்ட, தமிழர் விடுதலைக்கூட்டணி எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளின் ஓர் அம்சமாக, கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரி தலைமையில் அண்மையில் வட்டக்கச்சியில் சமபந்திபோசனம் நடைபெற்றது.



தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டக்கச்சி கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இச்சமபந்திபோசனம், வட்டக்கச்சியில் உள்ள சிறுபான்மைத் தமிழர் ஒருவரின் இல்லத்திலேயே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இக்கூட்டத்தில் பேசிய திரு. வி. ஆனந்தசங்கரி பா. உ. சாதிமத, வேறுபாடுகளை மறந்து தமிழ் சமுதாயம் ஒன்றுபடவேண்டிய நேரம் இது என்றும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர்கள் இன்று தங்கள் உடமைகளை இழந்தாலும் சிறைச்

—3-ம் பக்கம் பார்க்க

## தமிழ் இளைஞர் பேரவையின் கண்டனத்தீர்மானம்

தமிழ் இளைஞர் பேரவையின் நடவடிக்கை குழு கூட்டம் சென்ற 27-6-76 ஞாயிற்றுக்கிழமை த. வி. கூட்டணி செயலகத்தில் திரு. கனகமனோகரன் தலைமையில் கூடியது. தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்பு வேலைகள், நடவடிக்கைகள்பற்றி நீண்டநேரம் விவாதிக்கப்பட்டபின்பு பின்வரும் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

"தமிழ் பொதுமக்களை குறிப்பாக இளைஞர்களை மிகவும் கொடூரமானமுறையில் இதுவரையும் தாக்கிவந்த

—3-ம் பக்கம் பார்க்க


ஆனி இதழ்

## இப்பொழுது எங்கும் விற்பனையாகிறது!

ஈழத்தின் தலைசிறந்த கலை இலக்கிய ஏடான

# சுடர்

CHUDAR

- குடமுழுக்குக் காணும் திருக்கேதீச்சரத்தின் எழிலார்ந்த தோற்றம் அட்டையை அழகு செய்கிறது.
- உள்ளே காசி ஆனந்தனின் 'சிறைச்சாலை இனிக்கும்', கோவை மகேசனின் தத்துவக்கட்டுரை, மூன்று சிறுகதைகள், முத்தான கட்டுரைகள், துணுக்குகள் மற்றும் பல அம்சங்களுடன் கிடைக்கிறது!
- தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதியுடன் இலக்கியச் சந்திப்பு!
- குமுதத்தின் திமிர்— ஆசிரியத் தலையங்கம்.

விலை ரூபா ஒன்று மட்டுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் கலாசாரத்தை 'சாம்பார்' கலாசாரம் ஆக்குவதை நாங்கள் அனுமதிக்க முடியாது!

## அடிமைப்பட்ட இனம் கலாசாரத்தை வளர்க்கமுடியுமா? எங்களை நாங்களே ஆளும் நிலை தோன்றவேண்டும்!"

[கொழும்பு உயர்நீதிமன்ற நடுவர் குழாமுன் குற்றஞ்சாட்டப்பட்டுப்பிணையில் விடப்பட்ட அன்று 18-6-76இல் காவலூர் பா. உ. (கா. பொ. இரத்தினம்) தேசிய அரசுப்பேரவையில் கலாசார அமைச்சின் குறை நிரப்புதொகையின் விவாதத்தின்போது பேசியது]

"இன்று காலை உயர்நீதிமன்றத்திலே குற்றஞ்சாட்டப்பட்டு 1000ரூபா சொந்தப்பிணையிலே விடுபட்டு இங்கு வந்திருக்கிறோம். கலாசார அமைச்சு தமிழ்க் கலை—கலாசாரத்தை வளர்ப்பதற்கு என்ன தொண்டுகளைச்செய்துள்ளது என்பதை அறியவிரும்புகிறேன். தமிழ்க் கலை கலாசாரத்தைப் புறக்கணிக்கின்ற துறையிலே முன் நிற்பது இந்த அமைச்சு என்பதை நான் அழுத்தந்திருத்தமாகக் கூறவிரும்புகிறேன்.

இங்கே எனக்கு முன் பேசிய மாண்புமிகு அங்கத்தவர்கள் பலர் இங்கள சங்கீதம், நடனம், நாடகம் முதலியவற்றைப் பற்றிப் பல கருத்துக்களைக் கூறினார்கள். ஆனால் தமிழ்க் கலை, கலாசாரம் முறையாக வளர்க்கப்படவில்லை. தமிழ்க் கலை, கலாசாரத்தை வளர்ப்பதற்கு முன்நிற்கின்றவர்கள் அரசாங்கத்துக்கு உரியவர்களாக - அரசாங்கம் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு இயைந்தால் மட்டுமே இந்தநாட்டிலே தமிழ்க் கலை, கலாசாரத்தை வளர்க்கின்றவர்களாகக் கருதப்படுகிறார்கள். உண்மையாகத் தமிழ்க் கலை, கலாசாரத்தை வளர்க்கின்ற புலவர்களுக்கு—அறிஞர்களுக்கு நாடகக் கலைஞர்களுக்கு — இசையாவர்களுக்கு இந்த அரசாங்கம் எந்த விதமான உற்சாகத்தையோ ஊக்கத்தையோ கொடுக்கவில்லை,

### சாகித்திய மண்டலத்தில் ஊதுகுழல்கள்

இந்த நாட்டிலே சாகித்திய மண்டலம் என்று ஒன்றை நடாத்துகிறார்கள்: அங்கே இருக்கின்றவர்கள் எல்லாரும் அரசாங்கத்தோடு ஒத்துப்பாடுகிறவர்களாக அரசாங்கம் செய்வதை சரியென்று சொல்லுகிறவர்களாக இருந்தால் தான் அங்கே அவர்களுக்கு இடம் இருக்கிறது; ஆனால் தன்னிச்சைப்படி தன்னுடைய கருத்துக்களைத் துணிந்து கூறத்தக்க தமிழ்க் கலைஞர்களுக்கு புலவர்களுக்கு — அறிஞர்களுக்கு சாகித்திய மண்டலத்தில் இடம் இல்லை.

நாடகவிழா—கலை விழா—இலக்கியவிழா என்றெல்லாம் விழா எடுக்கிறீர்கள்! இந்த விழாக்கள் இந்த நாட்டிலேயுள்ள தமிழ் அறிஞர்களோடு தமிழ்க் கலைஞர்களோடு எந்தவிதமான தொடர்புமின்றி, அரசாங்கத்தைத் திருப்திப்படுத்துகின்றவர்களோடுதான் தொடர்புடையதாகவிருக்கின்றன. இதனாலே அடிமைப்பட்ட இனமாக இருக்கின்ற நாம் எங்களுடைய கலை, கலாசாரத்தை வளர்க்கமுடியாத சூழ்நிலையிருக்கிறது.

### சாம்பாராக்கும் முயற்சி

எந்த நாட்டிலாயினும் கலை, கலாசாரத்தை அரசியலோடு சேர்த்துவிட்டால் அதுவும் அடக்கியாளுகின்ற அரசியலோடு சேர்த்துவிட்டால் அப்படி அடக்கியாளப்படுகின்ற இனத்தினுடைய கலையையும் கலாசாரத்தையும் வளர்க்க முடியாதென்பதை உண்மையான கலை, கலாசாரத்தின் வரலாற்றை அறிந்த மக்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். அரசியலைக் கலந்ததனாலே தான் இந்த நாட்டிலே எங்கள் கலை, கலாச்சாரம் முதலியன ஒதுக்கப்பட்டுள்ளன. தமிழ்க் கலை, கலாச்சாரத்தை ஒரு சாம்பாராக்கி, அதன் தனித்தன்மையைக் கெடுக்கின்ற முயற்சிதான் இந்த நாட்டிலே நடைபெறுகிறது. தமிழ்க்கலை கலாசாரம் நல்ல முறையிலே வளரவேண்டும். அதனுடைய பண்டைப் பெருமைக்கேற்ப — அதனுடைய பழைய வரலாற்றுக்கேற்ப புதிய வாழ்வுபெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இங்கே பேசுகிறேன். கலை கலாசாரம் என்றபோர்வையிலே— அரசாங்கத்தை ஆதரிக்கின்றோம் என்ற முறையிலே நடக்கின்ற திருவிளையாடல்களைப்பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை.

இந்தக்கலாசார அமைச்சு நடாத்துகின்ற தமிழ்க் கலை நிகழ்ச்சிகள் தமிழ் மக்களுடன் எந்த வகையினும் தொடர்புபடவில்லை; ஒரு குறிப்பிட்ட சிலர் கூடுகிறார்கள்; நடாத்துகிறார்கள். இப்படித்தான் இந்தக் கலாசார அலுவல்கள் தமிழர்களைப் பொறுத்தவரையிலே நடக்கின்றன. நல்ல முறையிலே தமிழையோ இசையையோ—நாடகத்தையோ வளர்க்கின்றவர்களுக்கு வேண்டிய ஊக்கமும் அளிக்கப்படவில்லை.

### தகுதியறிந்து ஆதரியுங்கள்

கது மலையிலே பண்டிதர் நாகலிங்கம் என்று ஒரு பழம்பெரும் புலவர் இருக்கிறார். அவருக்கு வருவாய் எதுவும் இருக்கவில்லை. அவருக்கு பண உதவிசெய்யுமாறு நாம் கேட்டுச் சென்ற அரசாங்கம் கொடுத்து வநதது; ஆனால் இந்த அரசாங்கம் வந்தபிறகு—அவர் இன்றும் வாழ்கின்றார் — வாழ வழியின்றி வாழ்கின்றார் — அவருக்குக்கொடுக்கப்பட்ட பணவுதவியும் நிறுத்தப்பட்டது. எனவேதான் எந்த வகையிலே இந்த அமைச்சு தமிழ்க்கலை, கலாசாரத்தை வளர்க்கின்றது என்று நான் மீண்டும் கேட்கவிரும்புகிறேன்.

ஆகவே இனிமேலாவது—நாங்கள் எங்களுக்கென்று ஒரு ஆட்சியை நிறுவிக்கொள்ளும் வரையிலாவது —இந்த அரசாங்கம் உண்மையிலே தமிழ்க் கலை, கலாசாரத்திலே சேர்ந்தவர்களை — அதனோடு ஈடுபாடுடையவர்களைத் தகுதியறிந்து—அரசியலைக் கலக்காமல் ஆதரிக்கவேண்டும்.

பெரும்பாலான தமிழ் மக்கள் இந்தக் கலாசார அமைச்சினுடைய நிகழ்ச்சிகளில் கலக்காமல் ஒதுங்கி நிற்கிறார்கள். கலையைக் கலாசாரத்தை வளர்ப்பதற்குப் பதிலாகத் தென்னிந்தியாவிலிருந்து வருகின்ற கலாசாரப் பத்திரிகைகளுக்குத் தடை விதித்து விட்டீர்கள்!

### "முற்போக்கு" சொற்சிலம்பம்

முற்போக்கு என்று சொல்லுகின்ற முறையிலே 'பகைப்புலம்', 'மண்வாசனை' போன்ற சில சொற்களை அடிக்கடி வைத்து எழுதுகின்றவர்களுக்கு மட்டுந்தான் இந்த நாட்டிலே கலை, கலாசாரம், எழுத்து முதலியவற்றை வளர்க்கும் உரிமையை இந்த அரசாங்கம் கொடுத்திருக்கின்றது; தமிழ்க் கலாசாரத்தின் உயிர் நிலையை அறிந்து—அதற்கேற்ப எவருக்கும் அஞ்சாமல், தமது கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் தமிழ்க் கலை கலாசாரத்தை நல்லமுறையில் வளர்க்கும் சிறந்த அறிஞர்களைப் போற்றி அவர்களுக்கு வேண்டிய ஊக்கத்தைச் கொடுத்ததற்கு இந்த அமைச்சு இனிமேலாவது தனது போக்கில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்த வேண்டும்.

### எழுத்தாளர்களுக்கு ஊக்கம்

சாகித்திய மண்டலம் சிறந்த அறிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் பரிசுகளைக் கொடுக்கின்றது என்கிறார்கள். இன்று எத்தனையோ எழுத்தாளர்கள் பல நூல்களை ஆக்கி வைத்திருக்கின்றார்கள். அவர்கள் தாம் ஆக்கிய நூல்களை வெளியிட முடியாத நிலையில் இருக்கிறார்கள்; இத்தகைய எழுத்தாளர்களுக்கு வேண்டிய ஊக்கம் அளிக்கப்படவில்லை. அவர்கள் தங்கள் படைப்புக்களை நல்ல முறையில் வெளியிட இந்த அரசாங்கம் வாய்ப்புக்களைக் கொடுக்கவில்லை. இந்த அமைச்சு இரண்டொருவருக்கு வாய்ப்புக்களைக் கொடுத்துப் பரிசுகளையும் அளித்திருக்கலாம். ஆனால், தமிழ் உலகம் — தமிழ் அறிஞர் உலகம் — தமிழ் இசை அறிஞர் உலகம் — தமிழ்க் கலைஞர் உலகம் — முற்றாக ஏற்றுக்கொள்ளாத ஒரு திசையில்தான் இந்தக் கலா

—3-ம் பக்கம் பார்க்க

# ப. நோ. கூ. சங்கத் தேர்தலில் பரபரப்பு!

## வாக்களிப்பு நேரத்தில் பொலிசார் புகுந்ததால் தேர்தல் குழம்பியது!

### காங்கேசன்துறை பொலிசுக்கு எதிராகப் புகார்!

தமிழர் விடுதலைக்கூட்டணி ஆதரவாளர்கள் வெற்றிபெறவிருந்த தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தின் 7வது கிளைத் தேர்தல், காங்கேசன்துறை பொலிசார் வேண்டுமென்றே தலையிட்டு கூட்டணி ஆதரவாளரான உறுப்பினர் ஒருவரை கைதுசெய்ததால்மூன்றுவது தடவையாகக் குழம்பியது; காங்கேசன்துறை பொலிசாரின் எதேச்சாதிகாரமானதும் பாரபட்சமுமான இச்செயல் பற்றி யாழ் பொலீஸ் அத்தியட்சகருக்கு முறைப்பாடு செய்யப்பட்டு இப்போது விசாரணை நடைபெற்றுவருகிறது!

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தின் 7வது கிளைத் தேர்தல் கடந்த 1-7-76ல் நடைபெறவிருந்தது: இத்தேர்தலில் வாக்களிக்கவிருந்த 9 அங்கத்தவர்களில் ஐவர் தமிழர் கூட்டணி ஆதரவாளர்கள் — நால்வர் மட்டுமே சி. சு. க. காங்கேசன்துறை தொகுதி அமைப்பாளராகிய முருகையா என்பவரின் ஆதரவாளர்கள். எனவே தேர்தலில் கூட்டணி ஆதரவாளர்கள் கிளையை கைப்பற்றவிருந்தனர்.

இதை குழப்பி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களான உறுப்பினரில் ஒருவரையாவது தங்கள் பக்கம் திருப்பிவிட ஆளுங்கட்சி அடிவருடிகள் எடுத்த முயற்சி எதுவும் பலனளிக்கவில்லையாம். கொழும்பிலிருந்து சிவலிங்கம் என்ற த. வி. கூ. ஆதரவாளரை 'கடத்தி' செல்வதற்கு கூட சிலர் முயற்சித்ததாகவும், அது நிறைவேறவில்லையென்றும் கூறப்படுகிறது.

திட்டமிட்டபடி தேர்தல் நடக்கவிருந்தவிடத்தில் த. வி. கூ. ஆதரவாளர்களான 5 உறுப்பினர்களும் எதிர்க்கட்சியைச்சேர்ந்த 4 உறுப்பினர்களுமாக ஒன்பது பேரும் சமுகம்கொடுத்திருந்தனர். தலைவரும் (முருகையா) அங்கிருந்தார். வாக்களிப்புநடைபெறவேண்டிய தருணம்; அப்போது திடீரென அங்கு தோன்றிய காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர், கூட்டணி ஆதரவாளர்களில் ஒருவரான சிவலிங்கத்தை தம்முடன் ஸ்டேசனுக்கு வருமாறும் ஓர் வாக்குமூலம் எடுக்கவேண்டியிருப்பதாகவும் அழைத்தார். தலைவர் முருகையாவோ அப்போது கப்சிப் என்று பேசாது இருந்தாராம். சிவலிங்கம் தான் வாக்களிப்பு முடிந்துவருவதாகவும் உடனடியாக வர முடியாது என்றும் கூறியும், பொலீஸ் அதிகாரி, சிவலிங்கத்தை பலவந்தமாக கைது செய்து கூட்டிச்சென்றாராம்.

வெளியில் சென்று ஓர் காரில் திரு. சிவலிங்கம் இருந்த சமயம், குண்டர்கள் சிலர் சிவலிங்கத்திடம் சென்று, "நீ 4வது மாடிக்கு போகப் போகிறாயா அல்லது முருகையா மாஸ்டருக்கு வாக்களிக்கப்போகிறாயா" என்று கேட்டனராம். சிவலிங்கமோ தான் பத்தாவது மாடிக்குப் போனாலும், முருகையாவுக்கு வாக்களிக்க முடியாது என்று ஒரேயடியாகக் கூறிவிட்டாராம்!

இதைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்துக்கு திரு. சிவலிங்கத்தைக் கூட்டிச் சென்ற பொலிஸ் அதிகாரி ஏதோ ஒரு வாக்குமூலத்தை தம் இஷ்டப்படி ஆங்கிலத்தில் எழுதி அதில் சிவலிங்கத்தை கையெழுத்திடும்படி கேட்டிருக்கிறார். தனக்கு விளங்காத மொழியில் எழுதப்பட்டுள்ள வாக்குமூலத்தில் தாம் கையெழுத்திட முடியாது என்று கூறிவிட்டு சிவலிங்கம் ஸ்டேசனிலிருந்து வெளியேறினார்;

இதற்கிடையில், சிவலிங்கம் பொலிஸாரால் எதேச்சாதிகாரமாக கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏனைய கூட்டணி ஆதரவாளர்கள் நால்வரும் கூட்டத்தைவிட்டு வெளியேறவே, 'கோரம்' இன்றி கூட்டம் குழம்பியது;

திரு. முருகையா காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டருடன் செய்துகொண்ட முன்னேற்பாட்டின்படியே தேர்தல் வாக்களிப்புநேரத்தில் சிவலிங்கம் திடீரென காரணமின்றிக் கைதுசெய்யப்பட்டதாக ஊரெங்கும் பேச்சு அடிபடுகிறது. முருகையாவின் இந்த சர்வாதிகாரத்தை எதிர்த்து காங்கேசன்துறை 29வது கிளைத்தேர்தலையும் உறுப்பினர்கள் பகிஷ்கரித்ததால், அதுவும் நடைபெறவில்லை.

காங்கேசன்துறைபொலிஸ் இன்ஸ்பெக்டரின் எதேச்சாதிகாரம்பற்றியும், முருகையாவுக்கு சார்பாக அவர் நடந்துகொண்டது பற்றியும் யாழ் பொலிஸ் மா அதிபருக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டைத்தொடர்ந்து இப்போது விசாரணை நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மாநாடு

# போர் முரசு கொட்டட்டும்!

## தமிழன் விடுதலை முழக்கம் உலகெலாம் பரவட்டும்!

திருக்கோணமலையில் எதிர்வரும் வெள்ளி, சனி ஆகிய நாட்களில் நடைபெறும் தமிழர் விடுதலை முன்னணியின் சிறப்பு மாநாடு எதிர்வரும் அறப் போராட்டங்களுக்கு வியூகம் வகுக்கும். வட்டுக்கோட்டை மாநாடு தமிழ் ஈழ வரலாற்றில் ஒரு திருப்புமுனை அதன் பலாபலனாக இந்நாட்டு நீதிமன்றத்திலேயே தமிழ் மக்களின் இலட்சிய முழக்கம் எதிரொலிக்கின்றது. திருமலை மாநாட்டை அடுத்து உலக மன்றங்களிலே தமிழன் குரல் ஒலிக்க நேரிடினும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. எப்படிப் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் குரல் ஐ. நா. பொதுச்சபையில் இன்று ஒலிக்கின்றதோ அதுபோன்று தமிழ் ஈழத்தின் குரலும் ஐ. நா. சபை உள்ளடங்க உலக மன்றங்களில் ஒலித்து எதிரொலிக்கப்போகும் நாள் தூரத்தில் இல்லை.

தமிழ் ஈழத்தின் குரல் திக்கெட்டும் கேட்கவேண்டும் ஈழத் தமிழனுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்பதற்காக தமிழர் விடுதலை முன்னணியும் கடல்கடந்த நாடுகளில் உள்ள தமிழர் இயக்கங்களும் வெகுவாகப் பாடுபட்டுவருகின்றன.

### இலண்டனில் எமது குரல்!

இலண்டனில் இயங்கி வரும் ஈழத் தமிழர் கழகத்தினர் ஆங்குள்ள விம்பிள்டன் பூங்காவில் 19-6-76ல் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தியுள்ளனர். டாக்டர் ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் "இலங்கையில் நடைபெறும் இன ஆதிக்கம் தடுத்து நிறுத்தப்படவேண்டும்" என்று குரல் கொடுத்துள்ளார் சிறுபான்மை உரிமைக் குழுவைச் சேர்ந்த வண. மைக்கல் ஸ்கொட். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் "இன ஆதிக்கம் என்பது வெள்ளைத் தோல் கறுப்புத்தோலை சுரண்டுவதுமட்டுமல்ல — அது இலங்கையில் நடப்பது போன்று மண்நிறத் தோல், அதே நிறத்தோலை அடக்குவதும் இன ஆதிக்கமே" என்று குறிப்பிட்டு இலங்கையில் இடம் பெறும் இன வொதுக்கலைச் சரியாகச் சாடியுள்ளார்.

அதே கூட்டத்தில் உரை நிகழ்த்திய லிபரல் கட்சியின் றிச்சாட் ஹேறன் என்பார், "ஈழம் வாழ் தேசிய இனம் நடத்துகின்ற போராட்டங்களுக்குத் தங்கள் ஆதரவை ஆணித்தரமாக எடுத்துரைத்ததுடன், இலங்கைத் தமிழர் பிரச்சினையை (பிரித்தானியாவின்) தமது லிபரல் கட்சியிலும் கிளப்பப்போவதாக" அறிவித்துள்ளார்.

"இலங்கைத் தமிழர்களையும் அவர்களது தலைவர்களையும் இலங்கையரசு தடுப்புக் காவல் சிறையில் தள்ளுவதற்குக் கண்டனம் தெரிவித்தும், அது சம்பந்தமாக பிரித்தானிய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும்" கோரும் தீர்மானம் ஒன்று பிரித்தானிய மக்கள் சபையில் கொண்டுவர முன்னறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தனியார் பிரேரணையில் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் ஆறு பேர் கையொப்பமிட்டுள்ளனராம்.

தமிழர் பிரச்சினை தமிழர் விடுதலை முன்னணியின் தோற்றத்தின் பின் பிரித்தானிய மக்கள் சபையில் கிளப்பப்படுவது இதுவே முதற்தடவை. இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடவேண்டாமென்று நட்பு முறையில் பிரித்தானிய அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்படலாம். ஆனால், எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையில் நடைபெறும் கூட்டுச்சேரா நாடுகள் மாநாட்டில் உலக நாடுகள் பலவற்றின் உள்நாட்டு விவகாரங்கள் உலகப் பொதுப் பிரச்சினைகளாக அலசப்படவுள்ள சந்தர்ப்பத்தில் தமிழர் பிரச்சினையை இனிமேலும் உள்நாட்டுப் பிரச்சினையாக மழுப்புவதும் பூசிமெழுகுவதும் சாத்தியப்படாது. ஆகவேதான் வேதம் ஓதும் சாத்தானின் மூலையில் தமிழர் பிரச்சினைகள் யாவற்றிற்கும் சர்வரோக நிவாரணியாக 20 அம்ச கோரிக்கைத்திட்டம் உதயமானது: போயும் போயும் மாஸ்கோ கம்யூனிஸ்டுக்கள், சாத்தானுல் ஏவான் தான் வஞ்சிக் [illegible] படுத்தியது போன்று தம்மோடு ஒரு சேரத் தமிழ் மக்களையும் சாத்தானின் சூழ்ப்பானைக்குள் மூழ்க வைக்கவா பார்க்கிறார்கள்?

### சுபாஷ் காட்டிய வழி

சிங்களச் சிறைகளில் தமிழ் இளைஞர் உண்ணாவிரதம் இருக்கவுள்ளார்களாம்: கூட்டுச்சேரா நாடுகள் மாநாட்டின் போது ஆகஸ்டில் நடைபெறவுள்ள மேற்படி மாநாட்டிற்கு முன்னர் விடுதலை செய்யப்படாவிடின் அல்லது நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படாவிடின் அரசியல் காரணங்களுக்காகத் தற்பொழுது சிங்களச் சிறைகளில் அடைபட்டிருக்கும் தமிழ் இளைஞர் சாகும்வரைக்குமான உண்ணாவிரத இயக்கமொன்றை ஆரம்பிக்கவிருப்பதாக சுதந்திரன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சுபாஷ் சந்திரபோஸ் இந்திய தேசிய இராணுவத்தை அமைப்பதற்கும் இந்தியாவில் இருந்து வெளியேறுவதற்கும் சிறையிருந்து தம்மை விடுவிக்கக் கையாண்ட மார்க்கம் சாகும்வரை உண்ணாவிரதமென்ற பயமுறுத்தலே. சுபாஷின் உண்ணாவிரதம் தொடர்ந்த போது எங்கே அவர் இறந்துவிட்டால் என்ன நேருமோவென்ற பீதியால் பிரிட்டிஷ் அரசாங்கம் அவரைச் சிறையிலிருந்து விடுவித்தது. அவரும் ஆப்கானிஸ்தான் வழியாக ஐரோப்பா சென்று மீண்டும் ஜப்பான் மார்க்கமாக சிங்கப்பூர் மலேசியா வந்தடைந்து தேசிய இந்திய இராணுவத்தைத்தோற்றுவித்தார். பர்மா மார்க்கமாக இந்திய தேசிய ராணுவம் இந்திய எல்லையைத் தாண்டியது வரலாறு. சுபாஷ்சந்திரபோஸின் மறப்போராட்ட வழிகளில் தமிழ் இளைஞர் இன்னமும் நாட்டம் கொள்ளாவிடத்தும் இலட்சிய புருஷரான அவர் கையாண்ட வழிமுறைகளை வரலாறு கற்பித்துக்கொண்டே இருக்கிறது.

### அயல்நாட்டு இளைஞர் பணி

அயல் நாடுகளில் வாழும் தமிழ் இளைஞர், தமிழர் பிரச்சினை தீர்வு பெறவேண்டுமென்பதில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர். வெளிநாட்டுப் பத்திரிகைகளில் தமிழர் பிரச்சினை இடம் பெறவேண்டுமென்பதற்காக செய்தி எழுத்தாளர்களைச் சந்தித்து உரையாடுகிறார்கள். தமிழர் பிரச்சினை சம்பந்தப்பட்ட இலக்கியங்களை விநியோகிக்கின்றார்கள். இச் சந்திப்புக்கள் தேநீர் விருந்தாக அல்லது பந்தி விருந்தாக அமையும்போது அதற்குத் தமது சொந்தப் பணத்தையே செலவிடுகின்றனர். இப்போது பேனா நண்பர்களையும் பயன்படுத்த ஆரம்பித்திருப்பதாகத்தெரிகிறது. உலகின் பல பாகங்களிலும் பேனா நண்பர்களைச் சம்பாதித்துக்கொண்டு அவர்களூடாகவும் தமிழர் பிரச்சினை உலக அரங்கில் இடம் பெறவேண்டுமென்று துடித்து நிற்கிறார்கள். தமது பேனா நண்பர் தமிழ் ஈழப் பிரச்சினையில் சிரத்தை எடுக்கும்போது அவராகவே தமது நாட்டுப் பத்திரிகையில் தமிழர் பிரச்சினையை எழுத முன்வரலாம் அல்லது அவரது உறவினர் நண்பர் யாரும் அந்நாட்டுப் பத்திரிகை எழுத்தாளராக அவருக்கு உதவலாம். இப்படிப் பல வழிகளாலும் தமிழர் பிரச்சினை முன்னேடுத்துச் சொல்லப்படுகிறது தமிழ் இளைஞர்களால்.

திருமலை சிறப்பு மாநாடு களம்காண நாள் குறிக்கும் மாநாடு. நாட்டைக் காக்க வீட்டுக்கு ஒரு வீரனைப் பண்டைத் தமிழ் நாடு அர்ப்பணித்தது. அன்று நடைபெற்றது நாட்டைக் காக்கும் போர்: இன்று நிகழவிருப்பதோ நாட்டை மீட்கும் போர்: அது தற்காப்புக்கானது; இன்று நடைபெறுவதோ ஜீவமரணப் போராட்டம். முழு இனமும் ஒன்றுபட்டு பங்காளராகவேண்டிய இறுதிப் போராட்டமாக எதிர்வரும் போராட்டம் அமையட்டும். திருமலை மாநாடு இவற்றிற்குக் கட்டியம் கூறட்டும்; குளக்கோட்டன் கவிதை உரைக்கும் தீர்க்கதரிசனம் நிறைவுற தமிழன் நாட்டில் தமிழன் ஆட்சியே தழைத்திடச் செய்யடா தமிழா.

திருமலை சிறப்பு மாநாடு வெற்றி சிறக்க வாழ்த்துவோம்!

திரவியம்

---

## திருகோணமலையில்....

— 1-ம் பக்கத் தொடர்

எழுச்சியையும் புரட்சியையும் ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டு ஏற்பாடுகள் யாவும் திருகோணமலை பா. உ. திரு நேமிநாதன் தலைவராகவும், மூதூர் பா. உ. திரு. அ. தங்கத்துரை, திரு. வீரசுப்பிரமணியம் ஆகியோரை செயலாளர்களாகவும்; திரு வே. தியாகராசாவை பொருளாளராகவும் கொண்டு இயங்கிவரும் மாநாட்டுக் குழுவினரால் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. நூற்றுக்கணக்கான இளைஞர்கள் மாநாட்டு வெற்றிக்கு இரவு பகலாக ஊணுறக்கமின்றி உழைத்து வருகிறார்கள்.

மாநாட்டுக்கு வருகை தரும் பிரதிநிதிகள் தங்குவதற்கு கோணேசர் மடம், இந்துக்கல்லூரி மண்டபம், மற்றும் பல விடுதிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு உணவு வழங்கும் ஏற்பாடுகளும் கவனிக்கப்பட்டுள்ளன.

மாநாட்டையொட்டி திருகோணமலையிலும், அதன் கிராமங்களிலும் பேரெழுச்சி காணப்படுகிறது. உதயசூரியன் கொடிகளும், சின்னங்களும் எங்கும் காணப்படத் தொடங்கிவிட்டன.

9-7-76 வெள்ளிக்கிழமை பிற்பகல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொடியை மூதறிஞர் செல்வா தேசிய கீதம் முழங்க ஏற்றிவைப்பார். இதைத் தொடர்ந்து மாநாடு ஆரம்பமாகும். கூட்டணியின் மத்தியகுழு, விஷயாலோசனையிலீடுபடும். இங்கு நடவடிக்கைக் குழுவின் செயற்திட்டங்கள் ஆராயப்பட்டு, அங்கீகரிக்கப்படும். இரவு வண. ஜோசெப் மேரி அடிகளார் தலைமையில் முற்றவெளியில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

10-7-76 சனிக்கிழமை காலை இந்துக்கல்லூரி மண்டபத்தில் தொழிலாளர் மாநாடு நடைபெறும். இதில் இ. தொ. கழகம் உள்ளிட்ட மலையகத் தொழிற்சங்கங்கள், தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியிலிருக்கும் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு பேசுவார்கள்.

அன்று மாலை மூதறிஞர் செல்வா தலைமையில் திருகோணமலை முற்றவெளியில் நடைபெறும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் போராட்டப் பிரகடனம் வாசிக்கப்படும். அதை விளக்கி கூட்டணி தலைவர்கள் பேசுவார்கள். வரவேற்புரையை திரு. பா. நேமிநாதன் பா. உ.வும், நன்றியுரையை அ. தங்கத்துரை பா. உ.வும் [illegible]கள்.

---

## 'தமிழ் கலாசார..

—2-ம் பக்கத் தொடர்

சார அமைச்சின் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இந்த நாட்டுத் தமிழ் மக்களோடு எந்தவிதமான இறுகிய நேர்மையான தொடர்பும் இல்லாத நிலையில்தான் இந்த அமைச்சுச் செல்கின்றது. இதனால்தான் நாங்கள் இந்த நாட்டு ஆட்சியில் பங்கு வேண்டும் என்று கேட்கிறோம். அப்படிப் பங்கிருந்து இந்த நாட்டில் எங்களை நாங்கள் ஆளும் நிலை வந்தால் தான் நாங்கள் வாழ முடியும். இந்தநாட்டு ஆட்சியில் எங்களுக்குப் பங்கில்லாமல் எங்கள் மொழியை, பண்பாட்டை, கலையை, கலாசாரத்தை வளர்க்க முடியாது என்ற நிலைக்கு நாங்கள் வந்துவிட்டோம்.

---

## சங்கரி தலைமை..

—1-ம் பக்கத் தொடர்

சாலை சென்றாலும், விடுதலைக்காகபோராடி தியாகங்கள் செய்யத்தயாராக இருக்கின்றனர் என்று எடுத்துரைத்தார்.

இச் சமபந்தி போசன நிகழ்ச்சியில் திரு. வை. வேலுப்பிள்ளை, கிருஷ்ணராசா. ஐ. திருஞானம் பி. பாக்கியநாதன், எம். நீக்கிலாஸ், திருமதி. எம். இராமச்சந்திரன், வி. குமாரசாமி ஆகியோரும் பேசினர். நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களும் இதில் கலந்துகொண்டு சாதிப்பேயை முறியடித்தனர்.

---

## தமிழ் இளைஞர்..

—1-ம் பக்கத் தொடர்

பொலிசார், தற்போது தமிழ் இளம் பெண்களையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று கேவலமான முறையில் தாக்குகின்ற அளவுக்கு வந்திருப்பது மிகவும் வேதனைக்குரியது. இதை இளைஞர் பேரவை வன்மையாக கண்டிக்கிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# நிலஅளவைத் திணைக்களத்து தமிழ் ஊழியர் கடன்பெற முடியாது அவதி!

## ஒப்பந்தப் பத்திரம் தமிழில் இல்லாததே காரணம்!

அரசாங்கம் ஏதோ தமிழருக்கும் தமிழுக்கும் அள்ளித்தந்துவிட்டதாகப் பெரிதாகப் பேசப்படுகிறது; ஆனால் நில அளவைத்திணைக்களத்து தமிழ் ஊழியர்கள் மேற்படி திணைக்களத்தில் கடன் பெறமுடியாது திண்டாடுகிறார்கள். காரணம் கடன் ஒப்பந்தப்பத்திரம், தமிழிலோ ஆங்கிலத்திலோ கிடையாது; இதை தமிழிலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்பதற்கு நீதியமைச்சு அனுமதி வழங்கவில்லையென்று கடன்சபையினர் தெரிவித்துள்ளனர்.

நில அளவைத் திணைக்களத்து கடன்வழங்கு சபையினரால் 10-3-76ம் திகதி ஓர் சுற்றறிக்கை திணைக்கள ஊழியர்களுக்கு விநியோகிக்கப் பட்டிருக்கிறது. இந்தச் சுற்றறிக்கை தமிழில் இருக்கிறது. இதன் இலக்கம் சு. நி. 2/76 இந்தச் சுற்றறிக்கையின் 2ம் பக்கத்தில் 'ஏ' பிரிவில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:-

''ஒப்பந்தப்பத்திரங்களும், பிணைப்பத்திரங்களும் அச்சிடப்பட்டுள்ள அதே மொழியிலேயே பூரணப்படுத்தப்படல் வேண்டும். ஒப்பந்தப்பத்திரம் ஆதியன தமிழிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்படுவதற்கு நீதித்திணைக்களத்தினால் இதுவரை அனுமதி வழங்கப்படாமையால் இவைகள் எங்களிடம் இல்லையென்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.''

ஆக, நீதித்திணைக்களம் மேற்படி பத்திரங்களை தமிழில் மொழிபெயர்க்க அனுமதி வழங்கவில்லையாம். அதனால் தமிழ்ப்பத்திரங்கள் கிடையாதாம். அரசாங்கம், தமிழுக்கு உரிமை தரும் 'இலட்சணம்' இதிலிருந்து தெரிகிறதல்லவா?

தமிழ் ஊழியர்கள் சிங்களத்தில் பத்திரங்களை நிரப்புவது முடிகிற காரியமா? புரியாதமொழியில் பத்திரங்களை எப்படி நிரப்புவது? தமிழில் கடன் ஒப்பந்தப் பத்திரங்களைமொழிபெயர்க்காமல், தமிழ் ஊழியர்களிடம், சிங்களத்தை வலுக்கட்டாயமாகத் திணிக்கும் நோக்கமா இது? அல்லது தமிழ் ஊழியர்களுக்கு கடனை வழங்காமலிருக்க செய்யப்பட்ட சதியா இது என்று நில அளவைத் திணைக்கள தமிழ் ஊழியர்கள் பொருமுகிறார்கள்.

நில அளவைத் திணைக்கள கடன்வழங்கு சபைத் தலைவர் ஓர் தமிழர்; அவர் பெயர் செ. விசாகசுந்தரம் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுபான்மைத் ...

—1-ம் பக்கத் தொடர்

மையும், பொறுப்பும் என்பதை உணர்ந்து அடுத்து வரும் பொதுத்தேர்தலில் குறைந்தது ஒருவரை முடியுமெனில் அதற்கு மேலும் சிறுபான்மைத் தமிழ் பிரதிநிதிகளைத்தெரிவு செய்ய வழி வகுப்பதென்று த. வி. கூ. முடிவுசெய்துள்ளது.''

# ஒவ்வொரு தமிழ் இளைஞனும் சிறை செல்லவேண்டும்!

—ரகுபதி பாலசிறீதரன்

''சிறைச்சாலைகளில் அடைப்பதன் மூலம் தமிழ் இளைஞர்களின் இலட்சியத்தை அடக்கிவிடமுடியாது''

திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்தின் இல்லத்தில் அண்மையில் நடந்த கருத்தரங்கில் ஏறத்தாழ 45 நாட்கள் சிறைவாசம் அனுபவித்துவிட்டு விடுதலையான த. இ. பேரவையின் கொழும்புக்கிளைத் தலைவர் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சிறைமீண்ட இளைஞர்கள் சார்பில் அவர் தொடர்ந்து பேசும் பொழுது, ''ஒவ்வொரு தமிழ் இளைஞனும் குறைந்தது இருவாரங்களாவது சிறைச்சாலையுள் இருக்கவேண்டும். அப்போதுதான் தமிழன் எவ்வளவு தூரம் அடிமை வாழ்வு நடாத்துகிறான் என்பதை உணரமுடியும்—சிறைச்சாலை தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரை ஒரு சிறந்த வகுப்பறை. நிறைந்த அனுபவங்களைப் பெறமுடியும்—சிறைச்சாலைகளுள் அடைப்பதன் மூலமும், பொலீஸ் தாக்குதல்களாலும் தமிழ் இளைஞர்களின் இலட்சிய வேட்கையை அடக்க முடியுமென சிங்கள அரசு எண்ணினால் அது தப்புக்கணக்குத்தான் போடுகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை, காட்டும் வழிகளில் தமிழ் இளைஞர்கள் நின்று இலட்சியங்களுக்காக இடைவிடாது போராடுவார்கள்; இது உறுதி! என்றார்—

## மாணவர்களின் இன உணர்ச்சி!

பருத்தித்துறை புலோலி ஆண்கள் மகாவித்தியாலயத்தில், தமிழ் இன உணர்ச்சி மிக்க மாணவர்கள் 'பந்தம் ஒழிக', தமிழ் ஈழம் மலர்க, பெறுவோம் தனி ஈழம் என்பனபோன்ற உணர்ச்சிமிக்க சுலோகங்களை வகுப்பு அறைகளிலேயே தடித்த எழுத்துக்களில் எழுதிவைத்திருக்கின்றனராம். வாழ்க நம் மாணவ மணிகளின் விடுதலை உணர்ச்சி!

சுதந்திரன்
SUTANTIRAN

# சிவகுமாரன் நினைவாக நோயாளர்களுக்கு இலவச பால்!



தியாகி சிவகுமாரனின் நினைவு தினத்தை யொட்டி தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்களும் தமிழ் இளைஞர்பேரவையின் உறுப்பினர்களும் திருக்கோயில் வைத்திய சாலையில் உள்ள நோயாளர்களுக்கு அண்மையில் (5-6-76) பால் விநியோகம் செய்தனர் தொடர்ந்து ஒவ்வொரு புதன் கிழமையும் இலவசமாக நோயாளர்களுக்கு பால் விநியோகிக்கப்பட்டு வருகிறது இதை முன்னின்று நடத்துவதற்கு எஸ். மார்க்கண்டன் தலைமையில் பூ. தட்சணாமூர்த்தி— திரு. தம்பிராசா, கு. இளையதம்பி, பொன். கோபாலன் ஆகியோரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கான பாலை கால் நடை வளர்ப்புச் சங்கத் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி தம்பிலுவில் கிளைத் தலைவருமாகிய க. சிந்தாத்துரை அவர்கள் சங்க மூலமாக அன்பளிப்புசெய்துள்ளார்.

## பரதநாட்டிய அரங்கேற்றம்

யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடமாணவி செல்வி கலாமதி விஜயரத்தினம் பரதநாட்டிய அரங்கேற்றம் ஆடி மாதம் 10ந் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பாரதி கலாமன்றத்தின் இயக்குநர் திருமதி ஞானமணி செல்லையாவின் கீழ் பரதநாட்டியம் பயின்ற செல்வி கலாமதி மல்லாகம் நீதிபரிபாலனப்பகுதி பாதுகாவல் அதிகாரி விஜயரத்தினம் தம்பதிகளின் புதல்வியாவார்.

பவர்ஸ் தியோவிட்

(கரையக் கூடிய தூள்)

வட பகுதியில் சிலர் கள்ளத்தனமான முறையில் ஏதோ ஒரு பங்கசு கொல்லியை கிட்டத்தட்ட தியோவிட் பக்கட் போன்ற 1 றூத்தல் பொலித்தின் பக்கற்றுகளில் அடைத்து விற்பனைசெய்து எங்கள் வாடிக்கையாளரை ஏமாற்றி வருகிறார்களென்பது எங்கள் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அரசாங்க இறக்குமதிக்கொள்கையின் மாற்றம் காரணமாக பவர்ஸ் தியோவிட் கடந்த 6 மாத காலமாக விற்பனைக்கு இல்லாததினால் போலிப் பொருளை இனிமேலும் இருப்பில் வைத்து பவர் தியோவிட் என விற்பது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகையினால் மேற்கூறப்பட்ட பக்கட்டுகளோடு சம்பந்தப்படும்போது பொதுமக்களாகிய நீங்கள், இதில் அடங்கியுள்ள பொருள் பவரின் தியோவிட் அல்ல என்பதனை முக்கியமாக அறிந்துகொள்ளவேண்டும்.

2-7-1976.

# வேலைநீக்கத்தை எதிர்த்து துறைமுக கூட்டுத்தாபனத்தின்முன் உண்ணாவிரதம்!

''சிங்களத் தேர்ச்சி'' பெறவில்லை என்ற காரணத்திற்காக துறைமுக (சரக்குக்) கூட்டுத்தாபனத்திலிருந்து ஆறு (6) தமிழ் பேசும் ஊழியர்களை வேலையிலிருந்து நிறுத்தியதை தமிழ் தொழிற்சங்க கூட்டணி வன்மையாகக் கண்டித்துள்ளது. வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களில் பலர் 45 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். பாரிய குடும்பப் பொறுப்புடன் வாழ்ந்துவரும் இவ்வூழியர்கள் ''சிங்களத் தேர்ச்சி'' பெற முடியாததற்கான நியாயரீதியான காரணத்தை கப்பற்றொழில் சுற்றுலா பிரயாண அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்ல அவர்களுக்கு எடுத்துக்கூறியிருந்தபோதிலும் துறைமுக சரக்குக் கூட்டுத்தாபன ஆளணிப் பகுதி அதிகாரிகளின் வகுப்புவாத [illegible] வடிக்கைகளால் இவ்[illegible]கள் பழிவாங்கப்படுவதாக அறியக்கிடக்கிறது.

இவ்வூழியர்கள் அனைவரையும் இம்மாதம் 15ந்திகதிக்கு முன்பதாக மீண்டும் வேலைக்கு அமர்த்தாதுவிடின் இம்மாத முடிவிற்குள் துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு முன்னால் உண்ணாவிரதப்போராட்டம் ஆரம்பிக்கப்படுமென தமிழ் தொழிற்சங்க கூட்டணி செயலாளர் நாயகம் இ. தி. சம்பந்தன் [illegible] யாண அமைச்சருக்கு அறிவித்துள்ளார்;

பணத்தை மிச்சப்படுத்துங்கள்

மில்க்வைற் சலவைப் பவுடர் மூலம் சலவை செய்யுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி. 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் ஜூலை மாதம் 7-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org